முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.165/2004**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 15.09.2025 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 15.09.2025 | சாட்சி | வா.சா.5 |
| பெயர் | வேணு | வயது.. | 48 |
| தந்தை பெயர்.. | சுப்ரமணின் | கிராமம்.. | கீழ்புவனகிரி |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு 1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. எனது பூர்வீகம் புவனகிரி. புவனகிரியில் எங்களது குடும்பத்தை ஆக்கூரார் குடும்பம் என்று அழைப்பார்கள் என்றால் சரிதான். தற்போது நான் அரும்பு தோட்டம், வாழை பயிர் செய்து வருகிறேன். எனது சொந்த இடத்தில் செய்து வருகிறேன். கடை வைத்திருக்கவில்லை wholesale கடையில் பூக்களை கொடுப்பேன். இது தவிர செங்ல்சூலையில் நான் பங்குதாரராக இருக்கிறேன், செங்கல்சூலை எனது இடத்தில் தான் இருக்கிறது, எனது இடத்திற்கு எனது பெயரில் தான் பட்டா இருக்கிறது. கடந்த 20 வருடங்களாக வர்த்தக சங்கத்திற்கு நான் தான் வாழை மரம், தோரணம் கட்டி தருகிறேன் என்றால் சரிதான். எந்த விலாசத்தில் வாழை மர தோரணம் கட்டப்படுகிறது என்றால் கடைதெருவில் இருக்கும் பூவராயர் மடத்திற்கு ஆகும்.

2. வர்த்தக சங்கம் தற்போது எங்கு செயல்படுகிறது என்றால் தெரியாது. தோரணம் கோவிலில் கட்டி வருகிறேன். என்னுடைய செங்கல்சூலை நான் தங்கவேலிடம் இருந்து கிரயம் வாங்கினேன். நான் சொல்வதுபோல் தங்கவேலிடம் இருந்து கிரயம் வாங்கவில்லை என்றாலும் வர்த்தக சங்க செயலாளர் ரத்தினசுப்பிரமணயித்திற்கு சொந்தமான இடத்தில் தான் செங்கல்சூலை வைத்திருக்கிறேன் என்றாலும் அதனால் தான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.